RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22476

OPEN ACCESS

# தமிழ்ப் பணியில் கந்தர்வன்

சி. ஆறுமுகம் [அ, *], து. கோவிந்தராஜீலு [அ]

[அ] முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, அரசு ஆடவர் கலைக்கல்லூரி, (பெரியார் பல்கலைக்கழகம், சேலம் - 636011), கிருஷ்ணகிரி-635001, தமிழ்நாடு, இந்தியா.

# Gandharvan in Tamil Works

C. Arumugam [a, *], D. Govindarajulu [a]

[a] Post Graduate Department of Tamil Studies, Government Arts College for Men, (Periyar University, Salem - 363011), Krishnagiri-635001, Tamil Nadu, India

* Corresponding Author: 6face.vel@gmail.com

Received: 13-07-2022
Revised: 07-09-2022
Accepted: 24-09-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

In Tamil literature, various authors have given the world the experience of the phenomenon they witnessed before the Sangam period. A great contribution to understanding the life of the people of the Sangam period is the Sangam literary texts, the Eighth and the Tenth. It can be seen that in the lives of the people of the Sangam period, there was a life of love both internally and externally, and an external life of bravery and generosity. It can be seen that most of these literatures are based on the life of the upper caste people. After that, about eighteen books, copies, devotional literature, short stories, novels, short stories, simple works such as today's Aikkoo, Kandiyu, Limairkoo appeared and today many literatures have come to be popular among the people. Over time, people have lost their lives by prioritizing the economy for a life of pleasure. Earlier stories, satsangs and dramas were held in every village. But today, no one is ready to even listen to advice stories from others. Therefore, poems and stories have become readable in a few minutes. In today's times, poets are doing a bit of a dismay to give ideas to people through literature. Thus, in the Gandharvan era, various literatures were created with many theories in mind, but Gandharvan presented his work to the world by putting forward many theories.

**Keywords:** Gandharvan, Tamil literature, Sangam period, Gandharvan works.

## முன்னுரை

கந்தர்வன் தன்னுடைய இளம் வயது முதல் அடிதட்டு மக்களின் வாழ்வியலைப் பார்த்து வளர்ந்தவர். தன்னுடைய இளைய பருவத்தில் கல்வி கற்க முடியாமல் துணிக்கடை, மளிகைக் கடை, தேனீர் கடை போன்றவற்றில் வேலை செய்து, பின்பு தன்னுடைய அயராத முயற்சியின் மூலம் படித்து அரசு பணிக்குச் சென்றவர். இவர், அடித்தட்டு மக்களின் துயரத்தைத் துடைக்க வேண்டும் என்று தன்னுடைய இறுதிக்காலம் வரை பாடுபட்டவர். சமகாலத்து எழுத்தாளர்களிடம் மிகுந்த அன்பு கொண்டு திகழ்ந்தவர். இவர் சமூகத்தின்மீது அயராத பற்றுக் கொண்டிருந்தார். எனவே, தம் படைப்புகள் மூலம் சமூக அவலங்களில் இருந்து அடித்தட்டு மக்களை உயிர்தெழச் செய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தார். பல்வேறுபட்ட களங்களில் பல எழுத்தாளர்கள் இலக்கியப் படைப்பைப் படைத்திருப்பினும் கந்தர்வன் பன்முக நோக்கில் தம்படைப்பைப் படைத்துள்ளார் என்பதை ஆராயும் விதமாக இவ்வாய்வு அமைகிறது.

### கந்தர்வன் - அறிமுகம்

கந்தர்வனின் இயற்பெயர் நாகலிங்கம். இராமநாதபுரம் மாவட்டம், சிக்கல் என்னும் ஊரைச் சார்ந்தவர். கணேசன், கனகம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர். 29 வயதில் அரசுப்பணிக்கு வந்த கந்தர்வன் தொழிற்சங்கவாதியாகத் தீவிரமாய் இருந்தவர். தன்னுடைய இளம் வயதில் தான் பட்ட துன்பங்களையும், அவர் கண்ட காட்சிகளையும், மக்களின் அறியாமைகளையும் தன்னுடைய எழுத்துகளின் மூலம் உணர்த்தியவர்.

### கந்தர்வன் காலத்திய இலக்கியப் போக்குகள்

இலக்கியம் என்பது வாழ்க்கை நிகழ்ச்சிகளின், உணர்வுகளின், சிந்தனைகளின் பிரதிபலிப்பாகும். இலக்கியத்திற்கு வாழ்க்கை ஆதாரமாகவும், வாழ்க்கைக்கு இலக்கியம் ஆதாரமாகவும் திகழ்கின்றது. இவ்விலக்கியத்தின் உருவமும் உள்ளடக்கமும் காலம் காலமாய் மாறிக்கொண்டே இருக்கின்றது. இன்னும் வருங்காலத்தில் பல மாற்றங்களுக்கு உள்ளாகும். இந்த மாற்றங்கள் அகம் சார்ந்ததாகவோ, புறம் சார்ந்ததாகவோ, அகப்புறம் சார்ந்ததாகவோ அமையலாம். இலக்கண, இலக்கியப் போக்குகள், கொள்கைகள், வழித் தடங்கள், குறிகள், பார்வைகள், சமூகக் காரணங்களுக்காக மாறிக்கொண்டே வந்துள்ளன.

தமிழ் மொழியானது உயர்தனிச் சொம்மொழியானது பண்டைய மொழிகளுள் ஒன்றாகவே இருப்பினும், மாற்றம், வளர்ச்சி என தனி அளவீட்டைக் கொண்டதாகக் காணப்படுகின்றன. தமிழ் மொழி இலக்கியத்தில் பல்வேறு இலக்கிய இலக்கணக் கோட்பாடுகள் தோன்றி பேசப்பட்டும், அதன் வழியில் படைப்புகள் உருவாக்கம் பெற்று வருகின்றன.

அவ்வகையில் கந்தர்வன் காலத்தில் தமிழ் இலக்கியப்பரப்பில் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்த இலக்கியங்கள், சர்ரியலியம் (Surrealism), அமைப்பியல் வாதம் (Structuralism) நவீனத்துவம் (modernism), பின் நவீனத்துவம் (Post Modernism), இருத்தலியல் வாதம் (Existentialism), தலித்தியம் (Daliyam), பெண்ணியம் (Feminism), பொதுவுடைமை (Communism), விஞ்ஞான சோசலிசம், மார்க்சியம் (Marxism), யதார்த்த வாதம் (Realism), அரசியல் பொருளாதாரம், விமர்சன எதார்த்த வாதம், சோசலிச எதார்த்தவாதம் முதலிய போன்ற இலக்கியங்கள் எழுத்தாளர்களிடையிலும் மக்கிளிடையேயும் காணப்பட்டக் கதை இலக்கியங்களாகும்.

### இலக்கிய ஆளுமை

கந்தர்வன் சிறுவயது முதலே படிப்பில் ஆர்வமிக்கவர். பணியிடை நீக்கம் செய்யப்பட்டு அவர் 19 மாதங்களாக வீட்டில் இருந்தபோதும் அவர் காலையில் ‘இந்து’ நாளிதழைத் தொடர்ந்து படிக்கும் பழக்கத்தினைக் கொண்டிருந்தார். தன்னுடைய வாழ்வில் தான் செலவழிக்கும் ஒவ்வொரு நெடியும் இலக்கியத்திலேயே செலவழித்தார்.

பாட்டிகள், திண்ணையில் உட்கார்ந்து “‘அந்தக் காலத்தில்’ என்று ஆரம்பித்து, ஒரு நாளைக்குப் பத்துக் கதைகளாவது சொல்வார்கள். ஒரு வருசம் விளைந்துவிட்டால் கோடை புராவும் திண்ணையும் கதையும்தான் வீட்டுக்கு வீடு.” இது நான் வளர்ந்த சூழலை எடுத்துரைக்கிறார் (Gandharvan, 2012).

இன்னொரு பக்கத்தில், “என் அப்பா அந்தக் கிராமத்தில் ஜில்லா முழுவதும் அறிந்த காங்கிரஸ்காரர். பெரிய தமிழ் வித்தகர். அரசியலும் தமிழும் பர்மாவில் கற்றுவந்தவர். அளுமைமிக்க மனிதர். இவ்விதமாகத்தான் எனக்கு மொழிப்பற்றும், இலக்கியப் பற்றும் கலந்து வந்திருக்கிறது” (Gandharvan, 2012)

பரமக்குடியில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும்போது நிறைய நாடகங்களை எழுதி இயக்கியுள்ளார். அரசு ஊழியர் சங்கத்தில் தீவிரமாக ஈடுபட்டக் காலத்தில்தான் நிறைய கவியரங்கத்திற்குச் செல்லத் தொடங்கினார். இக்கவியரங்கம்தான் இவரைப் பிற்காலத்தில்

இலக்கிய விமர்சகராகவும், சிறுகதை எழுத்தாளராகவும் உருவாகக் காரணமாகக் இருந்தன. தன்னுடைய பிள்ளைகளையும் இலக்கியத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்தவர் இவர் என்பதனை, 'அப்பா வெளியில் செல்லும் போது புத்தகத்தைக் கொடுத்துப் பாரதியார் பாடல்களைப் படித்துவை' என்று சொல்லிவிட்டுச் சென்று விடுவார் என்று, அவருடை மூத்த மகள் மைதிலி 'அப்பா' என்ற தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். தான் மட்டுமின்றி தன் பிள்ளைகளும், இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பதற்கு அவர் ஒரு முன்னோடியாக விளங்கியிருப்பதை அறியமுடிகிறது.

கந்தர்வன், ஒரு படைப்பாளியாகத் தன்னைச் சுற்றி நடக்கும் அனைத்து விஷயங்களையும் உற்றுநோக்கும் திறம் கொண்டவர். இவ்வகையில், தன்னைக் கவர்ந்த கவர்ச்சியான நிகழ்ச்சிகளையும் பாதித்த விஷயங்களையும் கதையாகவும் தன்னைக் கோபப்பட வைத்த விஷயங்களைக் கவிதையாகவும் படைத்திருப்பதை அவருடைய படைப்புகளின் வழி அறியமுடிகிறது. இவர், ஒரு படைப்பாளியாக மட்டுமில்லாமல் நல்ல பேச்சாளராகவும் திகழ்ந்தவர். இப்பேச்சிற்கான தொடக்கத்தைக் கூறும்போது, "நான் பரமக்குடியில் பணியில் இருந்தபோது முற்போக்கு எழுத்தாளர் சங்கக் கவியரங்கத்துக்குத் தணிகைச்செல்வன் அழைக்கப்பட்டிருந்தார். கவியரங்கத்திற்கு ஒரு நாள் முன்பு, அவர் என்னால் 'வர இயலாது' என தந்தி கொடுத்துவிட்டார். தோழர்கள், என்ன செய்வதென்று புரியாமல், என்னையே அவருக்குப் பதிலாய் தலைமைத் தாங்கிக் கவிதை வாசிக்கச் சொல்லிக் கேட்டார்கள். அப்போது, தணிக்கைச்செல்வன் மேடையில் கம்பீரமாய் முழங்கி, மக்களைக் கவரும் ஓர் ஆற்றல் மிக்க கவிஞராக வலம் வந்துகொண்டிருந்தார். அவரது இடத்தை என்னால் நிறைவு செய்ய முடியுமா என்று எனக்குத் தயக்கம். என் தயக்கத்தைச் சொல்லி மறுத்தேன். ஆனால், ஸ்தாபனத்தினால் நான் கட்டாயப்படுத்தப்பட்டேன். அந்த ஒரு நாளில் தணிகைச்செல்வனை மனத்தில் வைத்துக் கொண்டு, கவியரங்கத்துக்கான அலங்காரங்களோடு விவசாயிகளின் வாழ்வை முன்வைத்து ஒரு கவிதை எழுதினேன். நன்மாறன் அந்தக் கூட்டத்திற்குப்பேச வந்திருந்தார். எனக்குப் பாராட்டுகள் பெரிய அளவில் இருந்தன. அப்படியே தொடர்ந்து கவிதைகளை எளிய மொழியில் மக்களைக் கவரும் விதமான நடையில் எழுதத் தொடங்கினேன். இப்போது எழுதிக் கொண்டிருக்கிறேன்." என தன்னுடைய முதல் மேடைப்பேச்சை பதிவுசெய்துள்ளார் (Gandharvan, 2012).

கந்தர்வன் கண்ணதாசன், கணையாழி போன்ற இலக்கிய இதழ்களை வாசித்து வந்தார். அதோடு, அவர் ஒரு சிறந்த இலக்கியவாதியாகவே விளங்குவதற்குப் பல இதழ்களைத் தொடர்ந்து வாசித்து வந்தார்.

## படைப்புகள்

ஒரு முழுமையான படைப்பு என்பது அனுபவத்தின் சிறந்த வெளிப்பாடாகும். அனுபவத்திலிருந்து பெற்ற சிந்தனை வளர்ச்சியில் உணர்ந்த கருத்துக்களைப் பிறருக்கு வெளிப்படுத்துவதற்கும் ஒரு வடிவம் தேவைப்படுகிறது. அவ்வடிவமே படைப்பாகும். அவ்வகையில் படைப்பினை நல்ல ஓவியன் ஓவியமாகவும், நல்ல சிற்பி சிற்பமாகவும், நல்ல இசைக்கலைஞன் இசையாகவும், நல்ல இலக்கியவாதி இலக்கியமாகவும் படைப்பான். அப்படிப்பட்ட சிறந்த இலக்கிய அமைப்பை இவ்வுலகிற்கு கொண்டு வந்தவர் கந்தர்வன் என்பதை அறியமுடிகிறது.

இலக்கியப் படைப்பை, "எழுதுதல் என்ற செயற்பாடு ஒவ்வொரு எழுத்தாளர்களுக்கும் அவரவர் வாழ்வோடும், வாழ்வுச் சூழலோடும் பின்னிப் பிணைந்ததாகவே இருந்து வருகின்றது. எழுதுபவர் தான் அறிந்ததையோ மனதில் பதிந்துள்ளதையோ எழுத்தில் வெளிப்படுத்துகின்றனர்." (Lesser Simon, 1967) என்று திறனாய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும்,

'வாழ்க்கை அனுபவங்களுக்கும் கலைப் படைப்புகளுக்கும் இடையே உள்ள உறவு மறுக்க முடியாத படைப்பிற்கானப் பொருள்தேர்வு, இதை வெளிப்படுத்தும் முறை ஆகியவற்றில் படைப்பாளரது மனநிலை செல்வாக்குப் பெற்றிருக்கும்' என்று வண்ணநிலவன் படைப்புக் குறித்தத் தன் சிந்தனையைக் கூறுவது கவனிக்கத்தக்கது. எனவே, படைப்பாளர்களின் படைப்புகள் அதிகபடியாக அனுபவப் படைப்புகளாக அமைந்துள்ளதை அறியமுடிகிறது.

கந்தர்வன் தன்னுடைய தந்தையிடமிருந்தே இலக்கிய ஆர்வத்தை ஏற்படுத்திக்கொண்டார். முதலில் இலக்கிய விமர்சகராகத்தான் இலக்கிய உலகிற்கு அறிமுகமானார். அதன் பின்னர் கவிஞர், சிறந்த சிறுகதை எழுத்தாளர், நாடகக் கலைஞர், பாடலாசிரியர், அரசு ஊழியர், சிறந்த தொழிற்சங்கவாதி, மனிதநேயப் பண்பாளர், முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் என பன்முகங்களைக் கொண்டவராக உயர்ந்தார். கந்தர்வன் தன்னுடைய 67 - வருட வாழ்கையில் கவிதை, சிறுகதை, கட்டுரைகள் எழுதியுள்ளார். மேலும், நாடகங்களை எழுதி நடித்துள்ளார் என்பது சிறப்பிற்குறியது.

## கவிதை

இலக்கிய உலகிற்கு விமர்சகராக அறிமுகமானாலும் தன்னுடைய பதிமூன்று வயதிலேயே கவிதை எழுத ஆரம்பித்துவிட்டார். இலக்கிய வாழ்வில் முதல்முதலில் எழுதியதைத் தன்னுடைய முதல் கவிதை அனுபவத்தை, 'நான் பள்ளியில் படிக்கும் காலத்திலேயே மரபுக் கவிதைகள் எழுத தொடங்கி விட்டேன் என்றும், நிறைய வெண்பா எழுதுவேன். விடுதியில் ஈற்றடி சொல்லி, வெண்பா கேட்டார்கள். கணக்குப் பழகுவதற்காக வைத்திரக்கும் சிலேட்டில் வெண்பா எழுதிக் காண்பித்து அழிப்பேன். அப்படி கவிதை எனக்கு கை வந்திருந்தது.' என்று கந்தர்வன் நேர்காணல் ஒன்றில் கூறியுள்ளார்.

"நான் கவிதைகளில் பிரச்சாரம்தான் செய்கிறேன்" என்று நேர்மையாக அறிவித்துக் கவி புனைந்த சிவப்பு மனிதன் கந்தவர்கன். மேலும் சி.சு.செல்லப்பாவின் அறிமுகத்தாலும் பிச்சமூர்த்தி கவிதையாலும் அதுவரை நான் எழுதி வந்த கவிதைகள்மீது வெறுப்பு ஏற்பட்டன. பழைய புதிய வடிவ கவிதைகளை எழுதவும் எனக்குப் பிடிபடவில்லை என்கிறார்." (Gandharvan, 2015).

கந்தர்வன் தன்னுடைய கவிதைகளில் பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டை, தமிழ் ஒளி, தணிகைச்செல்வன், இன்குலாப் போன்றோர் செல்வாக்குகள் மிகுதியாகத் தன் கவிதையில் காணப்படுவதையும், கந்தர்வனுடைய எழுத்துக்கள் அனைத்தும், "ஏழை, எளிய கிராமத்து மக்களின் விடுதலைமீது இடையறாத ஆர்வமும் அக்கரையும் கொண்டிருந்தார்." என தி.க.சிவசங்கரன் குறிப்பிடுகின்றார். மேலும்,

"அழகியலிலும் உள்ளடக்கத்திலும் தன்னை மெருகேற்றிக் கொண்டு, புதிய புதிய ஆகாயங்களையும் புதிய புதிய சிகரங்களையும் தொட்டு நிற்கும். கவிஞராகவே 'கந்தர்வன்' காணப்படுகிறார்." என க.கனகராசு குறிப்பிடுகின்றார் (Jananesan, 2005).

ஒரு குறிப்பிட்ட நிகழ்வு, உணர்வு, காட்சி, மனநிலைப் பிரச்சனைகளைக் கவிதை ஆக்குவதன் மூலம்தான் வாழும் சமூகம் குறித்தக் கேள்விகளைக் கந்தர்வன் எழுப்ப முயல்கின்றார். இவரது, அகத்திலும் புறத்திலும் தோற்றுவிக்கும் சிக்கல்களே எளிய கவிதையாகியுள்ளன என்பதனை அவருடைய கவிதை வரிகள் நமக்குக் காட்சிப்படுத்துகின்றன.

கந்தர்வன் கவிதையில் மொழிநடையைக் கூறும்போது, "தனித்துவமானது, தனிச்றப்பானது, துல்லியமானது, சுயமுடையது, அவரது கவிதைக்குள் இயங்கிய கருத்து பாரம்பரியம் என்றால், மாயொ கோவஜ்கி, பாரதி, பாரதிதாசன் பாரம்பர்யம் என்று வரையறுத்து விடலாம். ஆனால், அவரது கவிதை வடிவம் எந்தப் பாரம்பர்யம் என்று சொல்லவே முடியாது. அது கந்தர்வனுக்கு மட்டுமேயான வடிவம் கந்தர்வ வடிவம்" என்று மேலாண்மை பொன்னுசாமி கந்தர்வனின் கவிதை மொழிநடை வடிவத்தினைக் குறிப்பிடுகின்றார் (Jananesan, 2005).

கவிதைகளின் வாயிலாக மக்களின் உணர்வுகளைத் தூண்டியவர் கந்தர்வன். இவர் ஒரு கருவூல அதிகாரி, சமூகப்போராளி, தமிழ்நாட்டு முற்போக்கு எழுத்தாளர், தொழிற்சங்க தீவர செயல்பாட்டாளர், நற்சிறுகதையாளர், நல்ல விமர்சகர், எழுத்தாளர் என பன்முகங்களால் போற்றப்பட்டாலும் அவர் கவிதைகளையே முதலில் எழுதினார்.

கந்தர்வன் கவிதை நூல்கள், கிழிசல்கள், மீசைகள், சிறைகள், கந்தர்வன் கவிதைகள் (முழுத்தொகுப்பு) ஆகியவையாகும்.

தன்னுடைய கவிதைகளில் அதிகமாக அடிதட்டு மக்களின் நிலையினை எடுத்துக்காட்டி உள்ளனர். இவ்வுலகில் வாழும் மக்களின் வாழ்க்கை நிலையினைக் குறிப்பிடும்போது பொருளாதாரத்தில் ஏற்றத் தாழ்வு இருப்பினும், உழைக்கும் வாக்கத்துக்கே கந்தர்வன் குரல் கொடுத்துள்ளதை,

"பழைய சோறும்

பாதாம் கீரும்

ஒரு வயிற்றுணவாய்

ஒரு நாளும் ஆவதில்லை

அப்படியே போனாலும்

வர்க்கச் சண்டை

வயிற்றுள்ளும் நடக்கும்" (Gandharvan, 2015)

'கூலி உயர்வுப் போர்கள்' எனும் கவிதையின் மூலம் அறியலாம்.

நம் நாடு முன்னேறுகின்றதோ இல்லையோ நாட்டில் விலைவாசிதான் முன்னேறுகின்றது என்பதை,

"பொது கிளாசில் டீ கேட்க

தனி கிளாசில் டீ கொடுக்க

ஒரு டீயின் விலை

9 உயிர்கள் என்று

விலைவாசி உயர்ந்த கிடக்கிறது" (Gandharvan, 2015)

'ஒரு டீயின் விலை' எனும் கவிதை வரிகளின் மூலம் அறியலாம்.

பெண்ணின் அடிமைத்தனத்தையும் பெண்ணின் விடுதலையும் போற்றும் வகையில் 20 -க்கும் மேற்பட்ட கவிதைகளை இயற்றியுள்ளார். உதாரணமாக,

"நாளும் கிழமையும்

நலிந்தோர்க் கில்லை

ஞாயிற்றுக் கிழமையும்

பெண்களுக்கில்லை" (Gandharvan, 2015)

'வளையல் விலங்குகள்' எனும் கவிதை வரிகளில் பெண்கள் அன்றாடம் துன்பத்தினை எடுத்துக்காட்டியுள்ளார். மேலும்,

"தங்கத்தில் சுவர் வைத்து

வைரத்தில் வாசல் வைத்தாலும்

அவள் வைக்கப்பட்ட இடம்

சிறையல்லவா" (Gandharvan, 2015)

'பெண்' எனும் கவிதை வரிகளில் பெண் அடிமைத்தனத்தைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

சமூகத்தின் சமத்துவத்தை,

“மேலும் கீழும்
செடிகள் வளர்ந்தால்
பார்க்க எப்படி
அழகாயிரக்கும்”
என்று கேட்டு,
“அளவிற்கதிகம்
வளர்ந்த செடிகளை
கத்தரி எடுத்து
வெட்டி விடு
சமமாயிருந்தால்
அழகாயிருக்கும்”

சமத்துவம் எனும் கவிதையில் சமூக சமத்துவ சிக்கலையும், அவற்றிக்கான தீர்வையும் கவிதையின் வாயிலா எடுத்துரைத்துள்ளதை அவருடைய கவிதையின் மூலம் அறியமுடிகிறது.

## கட்டுரைகள்

கந்தர்வன் 1969-ஆம் அண்டு சூன் மாதம் நடைபெற்ற எழுத்தாளர் சங்க மாநில மாநாட்டினை விமர்சித்து, ‘வரலாறு சொல்லும் தமிழ் எழுத்தாளர் மாநாடு’ என்ற தலைப்பில் தனது முதல் கட்டுரையைக் ‘கண்ணதாசன்’ இதழில் வெளியிட்டார். இக்கட்டுரையினை நாகலிங்கம் என்னும் பெயரில் எழுதினார். நேரடியாக அரசினை விமர்சித்துத் தன் படைப்புகளில் எழுதிய கந்தர்வனை மக்கள் எழுத்தாளர்கள் அவரைப் புனைப் பெயரோடு படைப்புகளை வெளியிடக் கூறினார்கள். அதன்பின் அவர் கண்ணதாசன் இதழில் நான்கு கட்டுரைகளையும் புத்தக விமர்சனங்களையும் அதிகமாக எழுதத்தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

1980 - ஆம் ஆண்டின் முற்பகுதியில் அமைச்சர் ராஜா முகமதுவின் பொருளுதவியினால் கவிஞர் நச்சினார்க்கினியனை ஆசிரியராகக்கொண்டு ‘வண்ணமயில்’ என்ற இலக்கிய மாத இதழ் வெளியிடப்பட்டது. அவ்விதழ்களிலும் தன்னுடைய கட்டுரைகளை எழுதியுள்ளார் கந்தர்வன்.

வண்ணமயில் இதழில், “தமிழக நடுத்தர மக்களின் ஆங்கில மோகம் குறித்தும் தனித்தமிழ் இயக்கத்தாரின் வேகம் குறித்தும் கந்தர்வன் எள்ளல் சுவையோடு எழுதிய கட்டுரை வாசகர் கவனத்தை அதிகளவு ஈர்த்தது.” (ஜனநேசன், 2005) என்று வண்ணமயில் இதழ் ஆசிரியர் நச்சினார்க்கினியர் குறிப்பிட்டிருப்பதன் மூலம் கந்தவா்வன் ஒரு சிறந்த கட்டுரையாசிரியராக திகழ்ந்தார் என்பதை அறிந்துக்கொள்ள முடிகிறது (Gandharvan, 2015).

2003 - ஆம் ஆண்டு மகாகவி பாரதியை ஒரு மதவாதக் கட்சியின் பிரதிநிதியாகக் காட்டி சிலர் சர்ச்சைகள் எழுப்பினர். அதற்குப் பதில் எழுப்பும் விதமாக கந்தர்வன் ‘மார்க்சிஸ்ட்’ 2003 செப்டம்பர் இதழில் ஒரு கட்டுரையினையும் எழுதியுள்ளார்.

இவைகளைத் தவிர, ப.வா.செல்லதுரை, ஜனநேசன், ஜீவி, நா.முத்து, நிலவன், கே.பாலசுப்பிரமணியன், பிரேமா அருணாசலம், மு.முருகேஷ், அ.வெண்ணிலா, தோழன் இராஜா, நா.முத்துக்குமார், ரோஜாகுமார், சுந்தரமூர்த்தி, இலக்குமிகுமாரன், ஞானதிரவியம், இரா.தெ.முத்து, அடுவி, புதுகை வெற்றி நிலவன் போன்றோரின் படைப்பு நூல்களுக்கு அணிந்துரை, முன்னுரை, மதிப்புரை என்னும் வகையில் பலவற்றை எழுதியுள்ளார்.

## நாடகத்துறை

கந்தர்வனுடைய இலக்கியம் நயமிக்க முத்திரைகளையும் மனித நேயம் மிக்க பதிவுகளையும் கொண்டுள்ளதாகும். நாடகத்துறையிலும் தன்னுடைய தடத்தினை பதித்துள்ளார். தொழிற்சங்கத்தில் இருந்தபோதும் பல நாடகங்களை எழுதி, இயக்கியும் அதில் நடித்தும் உள்ளார். இவர் எழுதிய நாடகங்கள் தொகுக்கப்பட்டு பதிப்புகளாக வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கந்தர்வன் நேர் பேச்சாக நம்மிடம் பேசம்போது அவரது முகபாவமும் உடல் மொழியும் ஒரு பிறவி நாடகக் கலைஞரைப்போல நம் கண்முன் காட்டும். இதனை, முனைவர் ஆர்.பாலச்சந்திரன், “பேச்சே ஒரு விவரிப்பாக ஏதோ ஒன்றிற்காக ஒத்திகைப் போல் எவரையும் ஈர்க்கும் விதமாக இருக்கும்” (ஜனநேசன், 2005) என்றும், “ஒரு தேர்ந்த நாடகக் கலைஞனைப்போல் தான் அழாமல் வாசிப்பவனை அழ வைக்கும் வரிகள் கந்தர்வனுடையவை” (ஜனநேசன், 2005) என்று ச.தமிழ்ச்செல்வன், கூறியுள்ளதை அறியமுடிகிறது.

முதன்முதலில் கந்தர்வனிடம் பழகுவதற்கு அவரது பேச்சும் உடல் மொழியும் செயற்கையாக நாடகத்தன்மை மிக்கதாகவும் தோன்றும். ஆனால், பழகப்பழக அவரது இயல்பானத் தன்மை என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

1970 - ஆம் ஆண்டு பரமக்குடியில் இருந்தபோது அவரே எழுதியும் இயக்கியும் நிறைய நாடகங்கள் நடிப்பார். பரமக்குடியில் உள்ள வீட்டின் மொட்டை மாடியில்தான் ஒத்திகையானது நடக்கும். நாடகங்களைப் பல ஊர்களுக்குச் சென்று நடத்துவதுண்டு.

‘நாடகங்கள்’, ‘முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநாடு’, ‘கலை இலக்கிய இரவு’ மற்றும் ‘ஜனநாயக மாதர்சங்க மாநாடு’களில் நடத்தப்படும் இத்தகைய சில நாடகங்களில் கந்தர்வன் அவர்களே கட்டியங்காரனகவும் நடித்துள்ளார்.

1986 - ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 முதல் 28 வரை தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பாக மதுரையில் நாடகப் பயிற்சி முகாமானது நடத்தப்பட்டது. அம்முகாமில் கந்தர்வன் தனது நாடகக் குழுவினரோடு கலந்துக்கொண்டார். இதனை, “கோமல் சுவாமிநாதன், உஸ்.வ.சகஸ்ரநாம், காந்தி கிராம பல்கலைக்கழக நாடகத்துறைப் பேராசிரியர், எஸ்.பி.சீனிவாசன், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத்துறை பேராசிரியர் இராமானுஜம், எழுத்தாளர் ஜெயகாந்தன் என்று வகுப்பெடுத்த எல்லோரும் சிரத்தையாகச் செய்தார்கள். நாங்கள் பட்டறையில் ஆக்கிய நாடகங்களைப் பொதுமக்களுக்கும் போட்டு காட்டினோம். அச்செயல் மிகவும் உற்சாகமாக இருந்தது.” (ஜனநேசன், 2005) என்று கந்தர்வன் பேராசிரியர் பழனி ராகுலதாசனுக்கு 08.12.1986 அன்று எதிய கடிகத்தில் குறிப்பிட்டுள்ளதை ஜனநேசன் குறிப்பிட்டுள்ளார்.

கந்தர்வன், அரசு கருவூலத்துறையில் உயரதிகாரியாக இருந்தபோது எந்தவிதமான அதிகாரத்தனமோ, கூச்சமோ இல்லாமல் சட்டை இல்லாத மேனியில் அரிதாரம் பூசி போலிச்சாமியாராக ‘நல்லூர் மக்கள்’ என்னும் நாடகத்தில் நடித்தவர் என்பதை, “இலக்கிய உயரம் உத்தியோக உயரம், சமூக அந்தஸ்து, வயது எதையும் பொருட்படுத்தாமல், சட்டையைக் கழற்றி வீசிவிட்டு விளையாட்டுக்கு நா வரட்டா என்று துள்ளலாய் கேட்கிற சிறுவனுக்கு உரிய ஆர்வத்துடிப்போடு, நா வேணும்னா நடிக்கிறேன் என்றார். அந்தச் சிவந்த மேனியில் வேட்டி மட்டும், திருநீற்றுப் பட்டைகள், வசனம் பேசி அவர் நடித்த அந்தக் காட்சியை இன்னும் பிரமிப்பாகவே நினைத்துப் பார்க்கிறேன்.” (ஜனநேசன், 2005) என்று மின்சாரப் பூ என்னும் நூலுக்காகச் சாகித்திய அகாதெமி பரிசினைப் பெற்ற மேலாண்மை பென்னுசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக, அவர் எழுதி நடித்த நாடகங்கள் பாதுகாக்கப்படாமையால் அவற்றின் படிகள் நூல் வடிவம் பெறாமலேயே போய்விட்டன.

### கடிதம்

கதை, கவிதை, கட்டுரை, விமர்சனம் எனப் பரந்துபட்ட தமிழ் இலக்கியப் படைப்பின் புதுவரவுதான் கடித இலக்கியம். மாற்று இலக்கிய வடிவங்களைப்போல் கூடுதலான கவனிப்பைக் கடித இலக்கியம் இன்னும் பெறாத நிலையில், வெளிவந்துள்ள கடித நூல்கள் மிகுந்த கவனிப்பையும் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

பண்டித ஜவஹர்லால் நேரு தன் மகளுக்கு எழுதிய கடிதங்கள் இந்தியப் புகழ் பெற்றவையாகும். அக்கடிதங்கள் நூலாக வந்து மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது அனைனவரும் அறிந்ததே. தந்தைக்கும் மகளுக்குமான நெருக்கமானப் பதிவுகளாக இல்லாமல், ஒரு தந்தை கடிதத்தின் மூலம் தன் மகளுக்கு இவ்வுலகை அறிமுகப்படுத்தும் முயற்சி என்கிற அளவுக்கு அந்தக் கடிதங்கள் அமைந்திருந்தன.

“எழுதப்படும் நேரங்களில், எழுதும் மனிதர்களின் உயிர்த்துடிப்புமிக்க உணர்வுகளை அப்படி அப்படியே எழுதப்படும் மனிதர்களுக்கு எளிய கடத்தியாக உதவிச் சுமந்து செல்கிற கடிதங்களை அபூர்வமாகவே பெறுகிறோம். அத்தகைய கடிதங்களைப் பெற முடிந்தர்வகள் எவ்வளவு பாக்கியசாலிகள்” (மு.முருகேஷ், 2007) என்று கமலாலயன் கந்தர்வனின் கடிதங்களில் காணப்படும் உணர்வு மிக்க எழுத்துக்களைக் குறித்து விளக்குகிறார்.

தமிழறிஞர்கள் மு.வரதராசனார், அறிஞர் அண்ணா போன்றவர்கள் தங்களின் சமூகத்திற்குச் சொல்ல வேண்டிய கருத்துக்களைக் கடிதத்தின் வடிவில் எழுதினார்கள். இருப்பினும், இவை கடித வடிவம் கொண்ட கட்டுரைகளேயாகும்.

தமிழில் கடித இலக்கியத்தின் முன்னோடிகளாக டி.கே.சி., புதுமைப்பித்தன், கு.அழகிரிசாமி, கி.ராஜநாராயணன் ஆகிய நால்வரும் குறிப்பிடத்தக்கவர்களாகும். இவர்கள், தங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும், பிற இலக்கிய வட்டத்திற்கும் எழுதிய கடிதங்கள் வெறும் கடிதங்களாக மட்டுமல்லாமல் சக மனிதனோடு அவர்கள் கொண்டுள்ள நேசத்தையும் நெருக்கத்தையும் உள்மனத்தின் ஓட்டங்களையும் உணர்த்துவதாய் அமைந்துள்ளன.

டி.கே.சி., புதுமைப்பித்தன், க.அழகிரிசாமி இவர்களின் மறைவுக்குப் பிறகுதான் இவர்கள் எழுதியக் கடிதங்கள் நூல் வடிவம் பெற்றன. அவை, அச்சு வடிவம் பெற வேண்டும் என்ற கட்டாயம் ஏதும் இல்லாமல், மனிதனோடு உள்ளார்ந்த அன்பு கொள்கின்ற தொடர்புச் சாதனமாகவே, கடிதங்கள் எழுதியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1989 - ஆம் ஆண்டு கி.ராஜநாராயணன் கடிதங்கள் கி.ரா.கடிதங்கள் என்னும் பெயரிலும் 1998 - ஆம் ஆண்டு ‘கடிதங்கள் கடிதங்கள்‘ கி.ரா., டாக்டர் கி.வே.சு இருவருக்குமான கடிதப் பகிர்வுகள் எனும் நூலாகவும் வெளிவந்து மிகுந்த பாராட்டுக்களைப் பெற்றுள்ளன.

மேலும், இவர்களைப் போன்றே வல்லிக்கண்ணன், கல்யாண்ஜி, தேன்மொழி, அ.வெண்ணிலா போன்றோரின் கடித நூல்களும் வெளிவந்துள்ளன.

கவிதை, சிறுகதை, விமர்சனம் எனப் பல்வேறு தளத்தில் பன்முகப்பட்ட பார்வை கொண்ட முற்போக்குப் படைப்பாளியான கவிஞர் கந்தர்வனின் கடிதங்களைத் தொகுத்துள்ள மு.முருகேஷ் அவர்கள் கூறும்போது,

“கடிதங்கள் ……

வெறும் காதிகங்களில்

எழுதப்பட்ட

எழுத்துக் கோர்வையல்ல

பரிமாறிக் கொள்ளத் துடிக்கிற

உணர்வின் தகிப்பு

தூரங்களைச் சுருக்கி

உள்ளங்கைக்குள் மனசை

உட்கார்த்தி வைக்கிற

அதிசயம்….?” (மு.முருகேஷ், 2007)

என்று நவீனக் கவிஞன் ஒருவன் எழுதிய கவிதைக்கதை கடிதக் காட்சிகளாய் கந்தர்வனின் கடிதங்கள் காணப்படுகின்றன.

## சிறுகதை

மக்கள் எழுத்தாளர்கள் சங்கத்தின் மூலமாகத்தான் கந்தர்வன் அவர்கள் சிறுகதைப் படைப்பாளியாக வெளியுலகிற்கு முதன் முதலில் அறிமுகமானார். மாதந்தோறும் நடந்து வந்த மக்கள் எழுத்தாளர் சங்கத்தின் வாசகர் பேரவை இலக்கியக் கூட்டங்களில் மாதந்தோறும் ஒரு படைப்பாளர்களின் சிறுகதையினைப் பற்றி ஆய்வினை வெளியிட்டு வந்தார். அக்கூட்டங்களில், வழக்கம்போல் நா.பார்த்தசாரதி, அசோகமித்திரன், தி.க.சிவசங்கரன், டி.செல்வராஜ், ஞானக்கூத்தன், ஜெயகாந்தன், சா.கந்தசாமி ஆகிய படைப்பாளர்கள் கலந்துகொண்டு புதிய படைப்பாளர்களை உற்சாகப்படுத்தினார்கள்.

வாசகர் பேரவை இலக்கியக் கூட்டத்தில் ஒரு நாள் சிறுகதைக் குறித்த விமர்சனம் நடத்தி முடிந்தவுடன் அடுத்த மாத வாசகர் பேரவைக் கூட்டத்தில் யாருடைய சிறுகதை ஆய்வுக்குட்படுத்துவது என்ற கேள்வி எழுந்தபோது, 'தி.க.சிவசங்கரன் எழுந்து கந்தர்வனை நோக்கி, எல்லாருடைய கதைகளைப் பற்றியும் விமர்சிக்கிற நீர் எப்பய்யா கதைச் செய்யப் போகிறீர்? என்று கேட்டு, அடுத்தக் கூட்டத்தில் கதையை நீங்கள் வாசிக்கிறீர் நாங்கள் ஆய்வு செய்கிறோம்' என்று அன்புக் கட்டளையிட அதை ஏற்றுக்கொண்டு சிறுகதை எழுத முன் வந்தார் கந்தர்வன்.

இதுவரை, இலக்கிய விமர்சனங்களை மட்டுமே எழுதிய கந்தர்வனுக்குச் சிறுகதை ஒரு சோதனையாக இருந்ததையும் ஒரு வாரம் வரைக்கும் சிறுகதைக்கான ஒரு வரியும் முழுமையாகத் தோன்றவில்லை என்றும் ஒரு சில நிகழ்வுகள் மனத்திற்குள் வந்தாலும் அவை அரைகுறையாகத் தெளிவில்லாமல் இருந்தது. அப்படித் தோன்றிய அவற்றைக் கதையாக்கும் கலை எனக்கு பிடிபடவில்லை என்று குறிப்பிடுகிறார்.

கந்தர்வன் எப்படி சிறுகதை எழுதத் தொடங்கினார் என்பதைப் பற்றி கந்தர்வன் கூறும்போது, "ஒரு நாள் சாலையோரம் நடந்து வருகையில் ஒரு மரண ஊர்வலம் பார்த்தேன். அவர்கள் மிகவும் எளியவர்கள், பிணம் ஏற்றிய பாடையின் முன் கம்பில் ஒரு கோழிக்குஞ்சு, தொங்கவிடப்பட்டு ஆடிக்கொண்டேபோனது. பிணம் - கோழிக்குஞ்சு எனக்கு முரண்பாடாகத் தெரிந்தன. வீட்டுக்கு வந்து இது ஏன் என்று என் அம்மாவிடம் கேட்டேன். சனிப்பிணம் தனியா போகாது என்பதால் கோழிக்குஞ்சுவையும் அடித்துக் கட்டி வைத்திருப்பார்கள் என்றார் அம்மா. எனக்குக் கதைக்கரு கிடைத்துவிட்டது; உட்கார்ந்து எழுத ஆரம்பித்தேன். ஒரு சொல்கூட வரவில்லை. பேனாவிலிருந்த மூன்று நாள் முயற்சிக்குப் பின்னும் தன்னால் ஒரு பத்திகூட எழுதி முடிக்கவில்லை" (கந்தர்வன், ப.2012) என்கிறாா் கந்தர்வன். மேலும், கூறும்போது "சென்னையில் கண்ட செய்தியினைத் தான் சென்னை சேரியில் நடந்த நிகழ்ச்சியாக எழுத முயற்சித்திருக்கிறேன். சென்னை மொழியும் வாழ்க்கை முறையும் எனக்கு அந்நியமானவை என்று உணர்ந்தேன். அடுத்த வினாடியே இந்த கருவை அப்படியே என் கிராமத்துக்குக் கொண்டு போய் அடைகாத்தேன். மறு வாரத்தில் கதை எழுத முடிந்தது" (கந்தர்வன், ப.2004) என்றும் கூறுகிறார்.

கந்தர்வன் கதையினை மக்கள் எழுத்தாளர்கள் சங்கத்தில் வாசித்தபோது பலமான கைத்தட்டலும் அங்கீகரிப்பும் கிடைத்தது. இக்கதையினை அவருடைய கையிலிருந்து தி.க.சிவசங்கரன் பறித்துத் தாமரை இதழுக்கு அனுப்பினார். 1970 - ஆம் ஆண்டு தாமரை இதழில் இச்சிறுகதை வெளிவந்தது. இதன் பின்னரே அவர் முழுநேரச் சிறுகதையாளராக மாறினார்.

தாமரை இதழினைத் தொடர்ந்து செம்மலர், ஆனந்த விகடன், தீராநதி, சுபமங்களா, தினமணிகதிர், குமுதம், குங்குமம் போன்ற பல இதழ்களில் இவருடைய சிறுகதைகள் வெளிவந்தன.

தன்னுடைய சிறுகதைகள் ஒவ்வொன்றிலும் எதார்த்தவாதம், வாழ்க்கையின் உண்மையைக் கூறுவது. மனித நேயத்திற்குப் பாதை அமைப்பது போன்ற நிலையில் கம்பீரமாக நடை போட்டவர் கந்தர்வன். தன்னுடைய கதைகள் மூலம் வாசகர்களுக்குப் போராளியாக இல்லாமல்

எதார்த்தவாதியாக தெளிவாகத் தென்படுபவர் என்பதனை அவருடைய சிறுகதைகள் புலப்படுத்துகின்றன.

1. சீவன், 2. காடுவரை, 3. கதை, 4. பூவுக்குக் கீழே, 5. தினம் ஒரு பாண்டியன் எக்ஸ்பிரஸ், 6. தனித்தனியாய் தாகம், 7. அடுத்தது, 8. மங்கலநாதர், 9. மைதானத்து மரங்கள், 10. அரண்மனை நாய், 11. தூக்கம், 12. தான், 13. திரு வேறு, 14. விதிகளுக்கப்பால், 15. சனிப்பிணம், 16. இரண்டாவது ஷிப்ட், 17. சாசனம், 18. ஒருபொழுதாயினும், 19.மழை பெய்தும், 20. பக்கிரி, 21. தன்னோடு, 22. சிம்மாசனம், 23. துண்டு, 24. கிரகச்சாரம், 25. சவடால், 26. ஒவ்வொரு கல்லாய்..., 27. காடு, 28. காந்தாரி, 29. தராசு, 30. ஒரு இடந்தேடி, 31. வைபோகமே, n32. எங்கெங்கும் அம்மாக்கள், 33. ஆம்பிளை, 34. அதிசயம், 35. தலைவர், 36. கதை தேசம், 37. தெரியாமலே, 38. காளிப்புள்ளே, 39. யாரோ ஒருவர், 40. தண்ணீர், 41. கவரி, 42. பைமாஷ், 43. உயிர், 44. ஒரு சீட்டுக்காரனுக்காக, 45. கொம்பன், 46. மணியாடர், 47. அனுமர் காத்திருக்கிறார், 48. வேண்டுதல், 49. பழையன கழிதலும், 50. அப்பாவும் அம்மாவும், 51. தாத்தாவும் பாட்டியும், 52. பத்தினி ஓலம், 53. பேசுகிறேன், 54. கல்லாதது, 55. பதினாறு பெரியகருப்பன், 56. ஈரம், 57. இலக்குகள், 58. பொய்விதிகள், 59. காவடி, 60. வெள்ளைப்பேய், 61. அவரும் பாவம்...

போன்ற சிறுகதைகளைப் படைத்துள்ளார். இவருடைய சிறுகதை ஒவ்வொன்றும் தனிச் சிறப்புமிக்கது என்பதனை, "ஏழை, எளிய கிராமத்து மக்களின் பால் அவர்களின் விடுதலையின் மீது இடையறாத ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்தவர் என்றும், அவரது எழுத்துக்களை கிராமத்து மக்களின் இதய ஒலி என்றும், அவர்களின் ஆன்மாவை, கலையழகுடன் பிரதிபலித்தன" (ஜனநேசன், 2005) என்று தி.க.சிவசங்கரன் கூறுகிறார். மேலும், அவருடைய கதைகளைப் பற்றி பொன்னீலன் கூறும்போது, "பாசாங்கு இல்லாத அவரைப் போலவே அவருடைய கதைகளும் எந்தவிதப் பாசாங்கும் இல்லாதவை. வாசகரை மிரட்ட வேண்டும். அவரைத் திகைக்க வைக்க வேண்டும் என்று ஒரு போதும் அவர் எண்ணியதில்லை. எழுதப் படிக்கத் தெரிந்தவர் எல்லோரும் தன் கதையை அனுபவிக்க வேண்டும் என்று ரொம்பவும் விசாலமாக எண்ணியவர் அவர். மர்மத்தன்மையோ, இருண்மையோ அவரிடம் சிறிதும் இல்லாதது போலவே, அவர் கதைகளிலும் சிறிதும் இல்லை" ஜனநேசன், ப.95) என்கிறார். மேலும், சூடிக்கொள்வதற்குரிய மலர்களாகவும் எறிவதற்குரிய கைக்குண்டுகளாகவும் படைப்புகள் அமைய வேண்டும் என்பார். அத்தன்மையானப் படைப்புகளே கந்தர்வனுடைய சிறுகதைகள்.

"கந்தர்வனின் கதையுலகம் முகத் தனித்தன்மை வாய்ந்ததாயிருந்தது. அழகியலும் சமூக எதார்த்தங்களும் மிகச் சரியான விகிதத்தில் கலந்து படைக்கப்பட்டவை" (மு.முருகேஷ், ப.6) என்கிறார் கமலாலயன்.

"கந்தர்வனின் படைப்புகள் தொழிற்சங்க அரசியலுக்கும் கொள்கைக்கும், தத்துவத்திற்கும் அப்பால் போய் மனித மனங்களில் படிந்து கிடந்த மென் உணர்வுகளைத் தேடி கொண்டு வந்தவை" (ப.வா.செல்லதுரை, 2013) என்று பவா செல்லதுரை குறிப்பிடுகிறார்.

கந்தர்வன் மக்கள் அடிமைத்தனத்தையும், அறியாமையையும் விட்டு உயர்வான வாழ்வை வாழவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு சிறுகதைப் படைப்புகளைப் படைத்துள்ளதை அறியமுகிறது.

## கந்தர்வனும் இதழும்

கந்தர்வன் தனது சிறுகதைகளை முதலில் இதழ்களில்தான் எழுதி வந்தார். அவ்வகையில் 1970 - ல் 'தாமரை' என்ற தனது முதல் கதையான 'சனிப்பிணம்' என்ற கதையினை வெளியிட்டார். இதன் பின் அவர், செம்மலர், ஆனந்த விகடன், இந்தியன் எக்ஸ்பிரஸ், சுபமங்களா, புதிய பார்வை, தினமணிக் கதிர், குங்குமம், குமுதம், நீராநதி, புதுவிசை, கூட்டாஞ்சோறு, கணையாழி போன்ற இதழ்களில் தன்னுடைய சிறுகதை படைப்புகளை எழுதி வெளியிடத்தொடங்கினார்.

## முடிவுரை

**கந்தர்வன் பிறப்பு இராமனாதபுரம் மாவட்டம், சிக்கல் என்ற குக்கிராமமாக இருந்தபோதிலும், அவர் தொழில் ரீதியாகப் பயணித்த இடங்கள் பல. அவருடைய வாழ்வில் கடந்து வந்த பாதை என்பது மிகவும் கடினமானதாக இருந்ததை உணர முடிகிறது. அவர் இளம் வயது தொட்டே தொழிலில் அமா்த்தப்பட்டதனால் அவருடைய படைப்புகள் அனைத்தும் அடிப்படை வாதங்களை முன்னெடுத்து, அடித்தட்டு மக்களின் வாழ்வியலில் முன்னேற்றம் பெறவேண்டும் என்ற வேட்கையை முதன்மைபடுத்தி மக்களின் அடிப்படைச் சிக்கல்களையும் சிக்கலுக்கான தீர்வுகளையும் கவிதை, சிறுகதை, கட்டுரை, கடிதம், நாடகங்கள் போன்ற தம் படைப்புகளின் வாயிலாக வெளிக்காட்டியுள்ளதை அறியமுடிகிறது. மேலும், அவருடைய பழக்க வழக்கங்கள் மக்களின் மேன்மைக்காக உழைக்கும் வர்கத்தினருக்காக பாடுபடுவேரிடம் நட்புப் பாரட்டி வந்துள்ளார் என்பதை நாம் பார்க்க முடிகிறது. கந்தர்வன் எழுத்துகள் யாவையும் பெயருக்காக எழுதப்பபட்டவை அல்ல. அவை யாவும் பொய்மை அற்று உயிா் உள்ளதாகவும், வாசகர்கள் எளிமையாகப் புரிந்துகொள்ளும் வகையில், தமிழ் இலக்கிய உலகில் மற்ற எழுத்தாளர்களைக் காட்டிலும் பன்முக நோக்கில் தன்னுடைய படைப்பைத் தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தந்தவர் கந்தர்வன் என்பதை இவ்வாய்வின் மூலம் அறியமுடிகிறது.**

## References

Gandharvan, (2012) Gandharvan Stories, Vamsi Books, Tiruvannamalai, 606601.

Gandharvan, (2015) Gandharvan Poems, Bharati Budhkalayam, Chennai, March – 2015.

Jananesan, (2005), Gandharvan Works, Akaram Publication, Thanjavur, 613007.

Jananesan, (2016), Indian Literary Sculptor Gandharvan, Sahitya Academy, Chennai.

Lesse Simon, D, (1967), Fiction and the Unconscious, Routledge & Kegan Paul, London.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License